# சாகித்ய அகாடமி நூல்களுக்கு 75 சதவீதம் வரை தள்ளுபடி

**சென்னை, நவ. 13–**

தேசிய புத்தக வாரத்தை முன்னிட்டு, சென்னையில் உள்ள சாகித்ய அகாடமி அலுவலகத்தில், நாளை முதல் 20ம் தேதி வரை, புத்தகக் கண்காட்சி நடக்க உள்ளது.

தமிழ் வளர்ச்சித் துறை இயக்குனர் அவ்வை அருள், கண்காட்சியை மாலை 5:30 மணிக்கு துவக்கி வைக்கவுள்ளார்.

தினமும் காலை 9:30 மணி முதல் மாலை 6:00 மணி வரை, 'குணா வளாகம், இரண்டாம் தளம், 443, அண்ணா சாலை, தேனாம்பேட்டை' என்ற முகவரியில் உள்ள அலுவலகத்தில், சாகித்ய அகாடமி நூல்கள் வாங்கலாம்.

தமிழ், ஆங்கிலம், ஹிந்தி, மலையாளம், தெலுங்கு உள்ளிட்ட மொழி நூல்கள், 25 சதவீதம் முதல் 75 சதவீதம் வரை தள்ளுபடி விலையில் விற்பனை செய்யப்பட உள்ளன.

சுஜாதா, க.நா.சுப்பிரமணியம், மவுனி, பிச்சமூர்த்தி, சுரதா, கண்ணதாசன், பாரதிதாசன் உள்ளிட்டோரின் படைப்புகள், விருது பெற்ற நூல்களின் மொழிபெயர்ப்புகள் இடம் பெறுகின்றன.

மேலும், இந்திய இலக்கிய சிற்பிகள் எனும் வரிசையில், மறைந்த எழுத்தாளர்களின் வாழ்க்கை வரலாறு, இலக்கிய பங்களிப்பு உள்ளிட்ட தகவல்கள் அடங்கிய 250க்கும் மேற்பட்ட அரிய நூல்களும் இடம் பெற உள்ளன.

விபரங்களுக்கு, 044 – 2435 4815 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.